
# திராவிட சினிமா

47

• வீ.மா.ச.சுபகுணராஜன்

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா..**

படங்கள் உதவி : ஞானம்





# திராவிட மாடலைக் காட்டிய மயிலும் மருத்துவரும்!

மிகுந்த கிளர்ச்சியோடும், பெருமித உணர்வுடனும், 'இது பெரியார் மண்' என்றும், 'பேரறிஞர் அண்ணாவின் அரசியல் சிந்தனைகள் பதியனிடப்பட்ட பூமி' என்றும், 'கலைஞர் எனும் மாபெரும் ஆட்சியாளரான சிற்பி' என்றும், 'தந்தை பெரியார்/ பேரறிஞர் அண்ணா சிந்தனைத் தடம் நடந்து, செதுக்கிய சுயமரியாதை, பகுத்தறிவு, சமூகநீதி ஆட்சி' என்றெல்லாம் பேசுகிறோம். 'அனைவருக்குமான வளர்ச்சியைத் திட்டமிட்டுக் கட்டமைத்த, மாநில சுயாட்சி கோரும் மாநிலம்' என மார்தட்டுகிறோம்.

பெரியாரிய சமூகநீதிச் சிந்தனைகளை இந்தச் சமூகத்தின் சிந்தனை மூலமாக மாற்றிவிட்டதாக உறுதியாகத் தெரிகிறது. இது கற்பனை இல்லையென்பதை 50 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கே 'திராவிட மாடல்' ஆட்சி தொடர்வது ஐயப்பாடுகளின்றி உறுதி செய்கிறது.

பாரத தேசியம் அல்லது இந்திய தேசியம் இங்கே தேர்தல் அரசியலில் காலூன்ற இயலாமல் தவிப்பதை அரசியல் களம், தேர்தல் முடிவுகள் நிரூபித்தபடி இருக்கின்றன. இன்னும் வலியுறுத்திச் சொல்வதானால், திராவிட மாநில உரிமை, கூட்டாட்சி, சமூகநீதிச் சிந்தனைகளை, சனாதன தேசியவாதத்துக்கு எதிரான குரலாக தேசியக் கட்சிகளே பேச வேண்டியதாகி இருக்கிறது.

## காட்சியில் உருவான தாக்கம்

இந்தக் கருத்தியல் தன்னை உறுதியாக நிலைநிறுத்திக் கொண்டுவிட்டதை, சமூகத்தின் பண்பாட்டுத் தளத்தில் உருவாக்கிய தாக்கத்தை தமிழ்த் திரைப்படங்களில் காண முடிகிறதா என்பதுதான் கேள்வி. இயல்பு வாழ்வின் சிறப்பே, மாற்றங்களை அதன் போக்கில் ஏற்றுக்கொண்டு நகர்வதே.

அந்த மாற்றங்களைச் சாத்தியமாக்கியது யார், எந்தச் சிந்தனை என்பதெல்லாம் அறிய கிடைப்பதில்லை. ஏனெனில், மாற்றத்துக்கான குரல் எப்போதும் சமூகத்தில் இருப்பு கொண்டிருக்கிறது. அது இயக்கமாகும் தருணங்களே வரலாற்றுத் தடங்களாகின்றன. அப்படியான ஒரு வரலாற்றுப் போக்கின் ஒளிரும் சுடர்தான் திராவிடமும் பெரியாரும். ஆனால், இன்றும் ஒரு கை விரல் விட்டு எண்ணும் அளவிலான திரைப்படங்களில்தான் பெரியார் படம் காட்சிப்படுகிறது என்பது ஆய்வுக்குரிய பொருள்.

தமிழ்த் திரைப்படங்களில் 90 சதவிகித இயக்குநர்கள் தங்களை முற்போக்காளர்களாகக் கருதுபவர்கள். அவர்கள் திரைப்படங்களில் காட்சிப்படும் புனித பிம்பங்கள், தேசிய சிந்தனையும், சர்வ தேசிய சிந்தனைகளும் கட்டமைத்துக் கொடுத்தவை. இந்த இயக்குநர்களில் 90 சதவிகிதம் பேர், தேசியவாதிகள் இல்லை, நடுநிலை என்ற பெயரிலான வலதுசாரிகள் (மதவாத / சாதியவாதிகள்). பல நேரங்களில் தங்களை இடதுசாரிகள் எனக் கருதிக்கொள்ளும் உன்னத இலக்கியவாதக் களத்திலிருந்து வந்தவர்கள்.

திராவிடக் கட்சிகள் ஆட்சியில் தொடர்வதால், இந்தத் தயக்கம் என நினைத்தால், தயங்காமல் எம்.ஜி.ஆரைக் காட்டுவார்கள். அப்படியானால் இவர்கள் விரோதம் திராவிடத்துடன் என்பது தெளிவு. அதாவது, திராவிடக் கருத்தியல் சார்ந்த அரசியல், பெரியாரை அவரது சிந்தனைகளைத் தங்கள் அடையாளமாக ஏற்றால் தவிர்க்கவியலாமல், தி.மு.க ஆதரவாகத் தோன்றிவிடும் என்பது இந்தச் சினிமா வியாபாரிகள் அறிவார்கள். ஏனெனில், பெரியார், தேர்தல் அரசியல் களத்திலும் இன்னும் தி.மு.க.வின் வழிகாட்டியாக மட்டுமே இருக்கிறார் என்பது வெளிப்படை.

## ஊருக்கு வந்த மனிதர்கள்!

கலையின் அற்புதம், வாழ்வின் சாராம்சமாக, வழிநடத்தும் அன்றாடமாகிவிட்ட கருத்தியல் விரவலின் விளைவு என்னவென்றால், எதிர்பாராத நொடியில், வாழ்வின் தருணமாக, கவனமாகத் தவிர்க்க விரும்பியது படைப்பில் வெளிப்பட்டு விடும். அப்படித்தான் தமிழ்த் திரைப்படங்களிலும்

**மக்களுக்கான மருத்துவம் மட்டுமின்றி, கால்நடைத் துறை விரிவாக்கம் கிராமத்துக்கும் வந்தடைந்ததற்குச் சாட்சியம் சொல்லியது 'பதினாறு வயதினிலே'.**

வெளிப்பட்டது. அப்படித்தான் தமிழ்த் திரைப்படங்களில், கலைஞரின் 'பராசக்தி'க்குப் பிறகு, இரண்டாவது திறப்பாகக் கருதப்பட்ட 'பதினாறு வயதினிலே' (1977) படத்தில், 'ஆத்தா நான் பத்தாங் கிளாஸ் பாஸாகி விட்டேன்' என்றபடி பச்சைப் பசேல் என்ற வயல்வெளியின் வரப்புகளில் ஓடிக்கொண்டே குரல் கொடுத்தாள் மயிலு.

எழுபதுகளின் சினிமாவை அதன் அதளப் பாதாள வீழ்ச்சியிலிருந்து மீட்டது இளையராஜாவும் பாரதிராஜாவும் அவர்களது அச்சு அசலான மண்வாசனைத் திரைப்படங்களும். அவர்கள் திரை விலக்கிக் காட்சிப்படுத்திய சமூகத்தில், அவர்களின் பிரக்ஞையின்றியே, பெரியாரும் அண்ணாவும் கலைஞரும் தங்கள் கருத்தின் இருப்பின் தடம் பதித்திருந்தனர்.

ஒரு குக்கிராமத்தில், வீட்டின் முன்னே ஓட்டுக் கூரையில் கடை வைத்துப் பிழைப்பு நடத்தும் கைம்பெண் குருவம்மாளின் மகள் மயிலு பத்தாங் கிளாஸ் பாஸானது தன்னிச்சையாக நடந்த கடவுளின் அற்புதம் அல்ல. கட்டணமில்லா உயர்நிலைக் கல்வியைக் கடைக்கோடிக் கிராமத்துக்கும் சாத்தியமாக்கிய திராவிட மாடல் ஆட்சியின் சாதனை.

இன்னும் மருத்துவச்சி நாயகி பேறுகாலம் பார்க்கும் 'அன்னக்கிளி' படத்திலிருந்து வெகுதூரம் வந்திருந்தது 'பதினாறு வயதினிலே'. ஆம், இங்கே மனிதரல்லாத விலங்குகளுக்கு, பறவைகளுக்கு மருத்துவம் பார்க்கும் மருத்துவர் அந்தக் கிராமத்தை வந்தடைந்திருந்தார். கலைஞர் ஆட்சியின் மக்களுக்கான மருத்துவம் மட்டுமின்றி, கால்நடைத் துறை விரிவாக்கம் கிராமத்துக்கும் வந்தடைந்ததற்குச் சாட்சியம் சொல்லியது 'பதினாறு வயதினிலே'.

இயக்குநர் பாரதிராஜா மண்ணை, மக்களை நேசித்தவர். அதை ஓரளவில் நேர்மையாகச் சொன்னவர். ஆனால், உறுதியாகத் திராவிடச் சிந்தனையை ஏற்காதவர். இதுதான் கலையின் நுட்பம். படைப்பில் நேர்மையிருந்தால், அசலான சமூகம் காட்சிப்பட்டால், நல்லாட்சியின் சாட்சியங்களை ஒளிக்க இயலாது. அதுதான் நடந்தது.

## இருளை அகற்றிய வெளிச்சம்

எழுபதுகளின் பிற்பகுதியில் தமிழ்த் திரையில், தமிழ் வாழ்வின் தொடர்ந்த இருப்புக் கொண்டதாகக் கருதப்பட்ட கிராமங்கள் காட்சியாகின. அந்தக் கிராமங்கள் பலவேளைகளில் ஒருவிதமான அழகியல் பார்வை கொண்டதாகவே இருந்தது. அழகிய கிராமங்களின் இருள் பகுதிகளைப் பெரிதாகக் காட்சிப்படுத்தவில்லை என்பது உண்மைதான். படைப்பாளியின் பார்வையில், காட்சிப்படுத்தல் நேர்மை இருந்த அளவு விமர்சனப் பார்வை இல்லை. ஆனால், ஓரளவு புறநிலையான படமாக்கம், கிராமங்களின் பிற்போக்குத்தனங்களைக் காட்சிப்படுத்தத் தவறவில்லை.

எளிய மனிதர்களின் வாழ்வு என்பதால், பல வேளைகளில், இயல்பாக 'இருள் பகுதிகளில்' மெல்லிய வெளிச்சத்தைப் பரப்பியது. ஒதுக்கப்பட்ட மக்கள் வாழ்வின் வலிகள், அவ்வப்போது வெளி உலகோடு தொடர்பு கொண்டவர்களின் குரல் வழியாகப் பேசப்பட்டது. 'கிழக்கே போகும் ரயில்' பட்டாளத்தான், காதலுக்கு ஆதரவான, சாதிக்கெதிரான, கைம்பெண்ணுக்கு ஆதரவாக எழுப்பும் குரலின் மூலம் எங்கிருந்து பெறப்பட்டு வருகிறது என்பது தெளிவு.

இந்த மண்வாசனை திரைப்படங்களில் தொடர்ந்து வெளியிலிருந்து கிராமங்களை நோக்கிப் பலவிதமான மனிதர்கள் வருகிறார்கள். அவர்கள் ஆசிரியர்கள், செவிலியர்கள், மின் துறை ஊழியர்கள், சாலைப் பணியாளர்கள், ரேசன் கடை ஊழியர்கள் மருத்துவர்கள் எனப் பல ரகம். ஆனால், அனைவரும் திராவிட மாடல் அரசின் மக்கள் வாழ்வு மேலாக்கப் பணியின் பிரதிநிதிகள் என்பதே கவனத்துக்குரியது. இவர்களெல்லாம் மேற்படி பட இயக்குநர்களின் கருத்தியல் விரோதத்தை மீறி, உள்ளே நுழைந்தவர்கள்.

கலைஞர் எனும் மாமனிதர் குறித்த ஆய்வுப்புலம் ஒருநாளும் தீராது. நவீனத் தமிழகத்தைக் கட்டமைத்த சிற்பியல்லவா அவர்..! அவரது ஆட்சியின் சாதனைகள் சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் வேறூன்றி விருட்சமாகிவிட்டது கண்கூடு. சமூகம் குறித்த எந்தவிதமான பரிசீலனையிலும் எஞ்சுவது அவரது தடமாகவே இருக்கும். ஆட்சியாளராக மட்டுமல்ல, திரைப்படப் படைப்பாளியாகவும் அவரது இரண்டாவது இன்னிங்ஸ், மூன்றாவது இன்னிங்ஸ் தொடர்ந்தபடி இருந்தது. அனைத்தையும் ஆய்ந்து முடிக்க எனது வாழ்நாள் போதாது. என்றாலும், சிறிது கால இடைவெளி எடுத்துக்கொண்டு ஆய்வைத் தொடர்கிறேன். நன்றி!

(முற்றும்)

## ஏற்றம் பெறும் எளியோர் செயல்!

எளியோர் செய்யும் சிறு செயல், சில நேரங்களில் மிகப் பெரிய செயலாக மாறும் என்பதற்கு சமீபத்திய உதாரணமாகத் திகழ்கின்றனர் சண்முகையா – வடக்குத்தியம்மாள் தம்பதிகள். தென்காசி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் தமிழ்நாடு கேரள எல்லைப் பகுதியான புளியரை என்கிற கிராமத்தில் வசித்து வரும் இவர்கள், தங்களின் துணிச்சலான முயற்சியால் பெரும் ரயில் விபத்தைத் தடுத்து நிறுத்தி இருக்கின்றனர்.

கடந்த 25–ஆம் தேதி நள்ளிரவு அப்பகுதியின் மலைச்சாலையில் இருந்து ஒரு சரக்கு வாகனம் கவிழ்ந்து ரயில் தண்டவாளத்தில் விழுந்துள்ளது. அப்பகுதிக்கு அருகில் வசித்த சண்முகையா – வடக்குத்தியம்மாள் தம்பதிகள் அதைக் கண்டதுடன், அந்த நேரத்தில் அவ்வழியாக வரும் பயணிகள் ரயிலை நிறுத்த வேண்டும் என கையில் டார்ச் லைட் அடித்துக் கொண்டே தண்டவாளத்தில் ஓடிச் சென்று எச்சரிக்கை செய்துள்ளனர். இவர்களின் அபாய எச்சரிக்கையை உணர்ந்து ரயில் நிறுத்தப்பட்டதால், பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. இவர்களின் செயலை அறிந்த நமது முதலமைச்சர் அவர்கள், "எளியோரின் பேருள்ளத்துக்கு இணையேதுமில்லை" என பாராட்டி மரியாதை செய்திருக்கிறார். எளியோர் குரல் வலிமை பெறும் ஆட்சியில், எளியோர் செயலும் ஏற்றம் பெறும்!

## ஃப்ளாஷ்பேக்



அக்ரி. கணேசன்



### திருமணத்தில் கழகத்துக்கு நிதி!

1979-ஆம் ஆண்டு, மார்ச் 23 அன்று எனக்கும் என்னுடைய இணையர் ருக்மணி அவர்களுக்கும், மதுரை தமுக்கம் மைதானத்தில் சீர்திருத்த முறையில் திருமணம் நடைபெற்றது. என் தந்தை, காரியாப்பட்டி ஒன்றிய அவைத் தலைவராகப் பொறுப்பு வகித்தார். திருமணத்தை கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் நடத்தி வைத்தனர். தலைவர்களை வரவேற்று, ரயில் நிலையத்திலிருந்து தமுக்கம் மைதானம் வரை கழகக் கொடி அலங்காரங்கள் செய்யப்பட்டன. மணவிழாவை நடத்தி வைத்து, வாழ்த்திய முத்தமிழறிஞர் அவர்களிடம் கழக வளர்ச்சி நிதியாக 1,000 ரூபாயை அளித்து மகிழ்ந்தோம்.

**–அக்ரி. கணேசன்,**
**கே.கே.நகர் பகுதிச் செயலாளர், மதுரை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### கீழ்வெண்மணியில் கலைஞர்!

1968-இல் நாகை மாவட்டம் கீழ்வெண்மணியில் கூலி விவசாயிகள் மீது நிலக்கிழார்கள் தாக்குதல் நடத்தி வீடுகளைக் கொளுத்திய சம்பவம் நடைபெற்றது. இந்த கொடூரச் சம்பவத்தில் குழந்தைகள், பெண்கள் என 42 பேர் கருகி இறந்தனர். அந்தச் செய்தி கேட்டு, உடல் நலிவுற்றிருந்த முதலமைச்சர் அண்ணா மிகவும் வருத்தமடைந்தார். உடனடியாக நேரில் சென்று நிலைமையை அறிந்துவர கலைஞருக்குக் கட்டளையிட்டார். அமைச்சர்கள் சத்தியவாணி முத்து, மாதவன் ஆகியோருடன் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினார் கலைஞர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

404

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131